புதுச்சேரி அரசு
வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை
**கூடுதல் வேளாண்மை இயக்குநர் அலுவலகம்**
காரைக்கால்

## செய்தி குறிப்பு

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக **"நிவர்"** புயலின் காரணமாக பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் தீவிர தூர் கட்டும் பருவம் மற்றும் தண்டு உருளும் நிலையில் உள்ளது. கனமழையின் காரணமாக வயல்களில் அதிகமாக தேங்கியுள்ள மழை நீரை வடிகட்டி தேவையான அளவிற்கு நீர் வைத்திருக்க வேண்டும்.

மேலும், கனமழைக்குப்பின் உள்ள தற்போதைய சூழல் பூச்சி நோய் தாக்குதலை அதிகப்படுத்தும் நிலையில் உள்ளது. ஆகவே. விவசாயிகள் தங்கள் பயிரினை அடிக்கடி பார்வையிட்டு இத்தகைய தாக்குதல்களின் நிலவரத்தை அறிய வேண்டும். மேலும், இத்தகைய சூழலில் பயிருக்கு தேவைக்கு அதிகமாக உரமிடுவதை தவிர்க்க வேண்டும்.

காரைக்கால் மாவட்டத்தில் நெற்பயிரில் . ஆங்காங்கே இலை சுருட்டுப் புழு, குருத்துப்பூச்சி, ஆணைக் கொம்பன் ஈ போன்ற பூச்சிகளின் தாக்குதல் தென்படுகிறது. இப்பூச்சித் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் காணப்பட்டால், குருத்துப்பூச்சிக்கு பைப்ரினில் 80% WG குருணை மருந்து ஏக்கருக்கு 20 முதல் 25 கிலோ (அல்லது) பைப்ரினில் 5% SC 400 மிலி (அல்லது) கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 50% SP 400 கிராம் (அல்லது) புளுபென்டமைடு 20% WG 60 கிராம் போன்ற மருந்துகளை அடிக்கலாம். இலைச்சுருட்டுப் புழுவுக்கு ஏக்கருக்கு தையமிக்தக்சாம் 25% WG மருந்து 40 கிராம், புளுபென்டமைடு 20% WG 60 கிராம், குளோரோடிரானிபரோல் 18.5% SC 60 கிராம், கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 50% SP 400 கிராம் ஆகிய மருந்துகளை அடித்து கட்டுப்படுத்தலாம்.

ஆணைக் கொம்பன் ஈக்கு தையமிக்தக்சாம் 25% WG மருந்து ஏக்கருக்கு 40 கிராம், பைப்ரினில் 5% SC 400 மிலி என்ற விகிதத்தில் அடித்து கட்டுப்படுத்தலாம்.

மேலும், விவசாயிகள் தங்கள் பயிர்களின் உர, பயிர் பாதுகாப்புக் குறித்த சந்தேகங்களுக்கு அருகில் உள்ள உழவர் உதவியகங்களை அணுகி ஆலோசனை பெறலாம் என்று காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் அறிவிக்கின்றார்.

26.11.20

கூடுதல் வேளாண்மை இயக்குநர் (பொ.)
காரைக்கால்